செய்தி வெளியீடு எண்: 02 நாள்: 02.03.2018

***தேனி மாவட்டம்,***
***தேசிய வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு (நபார்டு) வங்கி சார்பில் ரூ.5099.77 கோடி கடன் வழங்கிட இலக்கு நிர்ணையக்கப்பட்டுள்ளது மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல் :-***

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு (நபார்டு) வங்கி சார்பில், தேசிய கொள்கைகளான எல்லா நலத்திற்கும் நீர் மற்றும் ஒரு சொட்டு நீர் பல கட்டு பயிர் என்ற நோக்கத்திலும், வளம் சார்ந்த கடன் வழங்கிட இலக்கு நிர்ணையக்கப்பட்டுள்ளது. தேனி மாவட்டத்திற்கு 2018-19ஆம் நிதியாண்டிற்கு ரூ.5,099.77 கோடி மதிப்பீட்டில் முன்னுரிமை கடன் வழங்கிட இலக்கு நிர்ணைக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், வேளாண் சார்ந்த கடனுதவிகள், தானிய சேமிப்பு கிடங்கள், உணவு பதனிடும் தொழில்கள் தொடங்கிடரூ.4,249.64 கோடியும், சிறு மற்றும் குறு தொழில்கள் தொடங்கிட ரூ.377.96 கோடியும், புதிய வீடுகள் கட்டுவதற்கு ரூ.139.39 கோடியும் மேலும், இதர முன்னுரிமை கடன்கள் வழங்கிட இலக்கு நிர்ணையக்கப்பட்டுள்ளது.

மேலும், வேளாண் சார்ந்த கடன்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து கடனுதவி வழங்கிட வங்கி மேலாளர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**